நாள் 26.02.2026 STC 373/2023 அ.சா. 3

பெயர் நாகராஜன்

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் கு.வி)

(1) ரோந்து பணிக்கு மாலை 05.00 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து கிளம்பினோம். என்னுடன் முதல் நிலை காவலர் கார்த்திக் ராஜா, காவலர் 1147 மதுரை வீரன் ஆகியோர் சென்றோம். கொமரலிங்கம், கொழுமம், பாப்பான்குளம், ரெட்டியாபாளையம், ருத்திரபாளையம் ஆகிய பகுதிகளில் ரோந்து சென்றோம். ரகசிய தகவல் கிடைத்த போது என்னுடன் அதே இரண்டு காவலர்கள் இருந்தார்கள். ரோந்து பணிக்கு நான் எனது இருசக்கர வாகனத்திலும், அவர்கள் இருவரும் கார்த்திக் ராஜாவின் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். எதிரியின் கடையை சோதனை செய்த போது இரவு 08.30 மணி இருக்கும். எதிரியின் கடையை சுற்றி அதே லைனில் சுமார் 2-3 கடைகள் உள்ளது. பொது மக்கள் அதிகம் நடமாடும் பகுதி என்றால் சரிதான்.

(2) எதிரியின் கடையை சோதனை செய்வதற்கு முன்பு பக்கத்தில் உள்ள கடைகளை சோதனை செய்தோமா என்றால் சோதனை செய்யவில்லை விசாரணை செய்தோம். புகையிலை கைப்பற்றும் போது உடன் யார் இருந்தார்கள் என்றால் நான் நேரடியாக பொருளை கைப்பற்றவில்லை அரசால் தடை செய்யப்பட்ட பொருள் விற்பனை செய்யப்படுகிறதா என்று விசாரித்தேன் அவர் தானாக குற்றத்தை ஒப்புக்கொண்டு எடுத்து ஒப்படைத்த தடை செய்யப்பட்ட பொருளை அதே காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றினேன். கைப்பற்றும் போது புகைப்படம் எடுத்தேனா என்றால் புகைப்படம் எடுத்ததாக ஞாபகம் வழக்கு ஆவணங்களில் சேர்க்கவில்லை. கைப்பற்றுதல் மகஜரில் பொது ஜன சாட்சிகள் யாரும் சேர்க்கவில்லை என்றால் சரிதான் யாரும் முன் வரவில்லை. கைப்பற்றப்பட்ட பொருளை என்ன செய்தேன் என்றால் கைப்பற்றப்பட்ட பொருளை அழித்தல் மகஜர் மூலமாக கீழே கொட்டி மண்ணால் மூடி அழித்துவிட்டோம். கீழே கொட்டி மண்ணால் மூடி அழித்து விட்டதாக சொல்லும் சமயம் புகைப்படம் எடுத்தேனா

என்றால் இல்லை.

(3) கைப்பற்றப்பட்ட பொருள் எவ்வளவு கிராம் என்றால் கணேஷ் என்கிற புகையிலை 11 பாக்கெட் கைப்பற்றினேன். உண்மையிலேயே எதிரி கடையில் புகையிலையை கைப்பற்றியிருந்தால் அதே இடத்தில் வைத்து புகைப்படம் எடுத்து வழக்கு ஆவணங்களில் சேர்த்திருப்பேன் என்றும், பொது மக்களை சாட்சியாக சேர்த்திருப்பேன் என்றும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.26 17:20:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்